**14 ஜூன் 2026**

**11ஆம் ஞாயிறு**

யாத்திராகமம் 19:2-6; உரோமையர் 5:6-11; மத்தேயு 9:36–10

அன்பும் கருணையும் கிருபையும் நிறைந்த இறைவன் தமது அன்பினால் நம்மை பலப்படுத்துகிறார்.இயேசு நம்மை தன்னைப் பின்பற்ற அழைக்கிறார்.பரிசுத்த ஆவி நம்மை உற்சாகப்படுத்துகிறார்.மூவொரு இறைவன் நம்மிடையே வாழ்ந்து செயல்படுகிறார்.அவர் எப்போதும் உங்களோடு இருப்பாராக!

**முன்னுரை**

ஒரு விவசாயி, தன் பண்ணையில் கோழிகளுடன் ஒன்றாக வளர்ந்து கொண்டிருந்த ஒரு கழுகைப் பார்த்து வியந்தான் அது கழுகைப்போல் அல்லாமல் உடன் வளர்ந்த கோழிகளைப் போலவே தரையில் உணவு தேடி, சுற்றி ஓடி, மேலே பார்க்காமல் உணவு உண்டு வாழ்ந்து வந்தது

ஒருநாள் அது சிறிது நேரம் வானத்தை நோக்கிப் அன்னாந்து பார்த்தது வித்தியாசமாக பறக்க முயற்ச்சித்ததுஅதை கவனித்த விவசாயி, அதை பிடித்து மெதுவாக உயரமான பாறைக்கு கொண்டு சென்று காற்று அதன் மேல் வேகமாக படுமாறு பாறையின் நுனியில் வைத்தான்.

முதலில் கழுகு பயந்தது. பின்னர் அது குழப்பமாக இறக்கைகள் அசைத்தது.அதன் பிறகு அதன் உள்ளத்தில் இருந்த கழுகின் இயல்பு விழித்து கொண்டது அது இறக்கைகளை விரித்து– பறந்தது.

அது புதிய பறவையாக தன்னை வெளிப்படுத்திக் கொள்ளவில்லை அது எப்போதும் போல கோழிகளுடன் இருந்ததை போலவே உணர்ந்தது.

இதுவே நம்பிக்கை மறைந்த கதை.

நாமும் தினசரி கவலைகள், பயங்கள், பழக்கங்களில் தவழ்ந்து கழுகைப்போல வாழ்ந்து கொண்டிருக்கிறோம் ஆனால் இறைவன் நம்மை அங்கே அப்படியே விட்டுவிடாமல் அவர் நம்மை அழைத்து, தூக்கி அணைத்து நம்முடைய உண்மையான அடையாளத்தை நினைவூட்டி வ்வசாயி கழுகைப் பறக்க அனுமதித்தது போல் நாம் வியக்கும் வகையில் நமக்கு நம்பிக்கை அளித்து நாம் நம்பிக்கை இழந்து விடாமல் பார்த்துக் கொள்கிறார்.

நாம் அவருடைய பிள்ளைகள்

நாம் அவரின் அன்புக்குரியவர்கள்

நாம் உயர உயர பறக்க அழைக்கப்பட்டவர்கள்

ஆனால் நாம் பலமுறை  இவற்றை மறந்து விடுகிறோம்

எனவே, நாம் ஆண்டவரிடம் திரும்பி,வந்து மன்னிப்பையும், ஆன்மீக உணர்வையும் புதிய வாழ்வையும் கேட்போம்.

**மறையுறை**

இறைவன் நம்மை அன்போடு தூக்கி அணைத்து தேர்ந்தெடுத்து, அனுப்பும் இறைவன்  அதோடு நமக்கு கட்டளையிடும் முன் நம்மை அன்போடு தூக்கி அனைக்கும் இறைவன்

முதல் வாசகத்தில் இறைவன் இயேசு சொல்கிறார்

“நான் உங்களை கழுகின் இறக்கைகளின் கீழ் தூக்கி வைத்து என்னிடத்தில் கொண்டு வந்தேன்.”என்கிறார்

இறைவன் முதலில் நம்மை காப்பாற்றுகிறார்,பிறகு நம்மை அழைக்கிறார்.

இறைவன் நமக்கு முதலில் தருவது இரக்கம் மற்றும் கருணை

பிறகுதான் நம்மை அனைத்துக்கும் பொறுப்பாளர் ஆக்குகிறார்

அதனால் இன்றைய முக்கியமான கேள்வி“இறைவன் என்னை விட்டு விடுவாரா?”விட்டு விட மாட்டார் “என்னை தூக்கி அனைக்கும் இறைவனை நான் நம்புவேனா?”இல்லையா? என்பது தான் தலையாய கேள்வி. அதனால் தான் நாம் தகுதியற்ற நிலையில் இருக்கும் போது கூட  இறைவன் நம்மை அன்பு செய்கிறார்

புனித பவுல் சொல்கிறார்“நாம் பாவிகளாகவே இருந்தபோதும் கூட கிறிஸ்து நமக்காக இறந்தார்.”

அதற்கு முன் இயேசு சீடர்களின் கால்களை கழுவினார்:

- யோவான் இயேசுவை அதிகம் நேசித்த சீடர்
- பேதுரு கடைசி நேரத்தில் இயேசுவை மறுதலித்தவர்
- யூதாஸ் இயேசுவை காட்டிக்கொடுத்த துரோகி

இயேசு கிறிஸ்துவிற்கு எல்லாம் தெரியும்.ஆனால் அவர் தான் காட்டிய செலுத்திய அன்பை நிறுத்தவில்லை.

இறைவன் நம்மை நாம் இருப்பதற்காக அல்ல, நம்மை மேன்மைப்படுத்துவதற்காக நேசிக்கிறார்.

மேய்ப்பர் இல்லாத ஆடுகள் போல உலக மக்கள் இருந்ததால்

இயேசு உலக மக்களைப் பார்த்து இரக்கம் கொண்டார்.

இன்றைய உலகத்தின் நிலை

- தகவல் தொடர்பு மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சி அதிகம்
- அமைதி அற்ற நிலையில் சகிப்புத் தன்மை குறைவு
- அனைத்திலும் வேகம் அதிகரிப்பு
- நல்ல நோக்கங்கள் குறைந்து கொண்டே வருகின்றன

ஆனால் இயேசு சொல்கிறார்:“அறுவடையோ மிகுதி”

அதனால் மனித இதயங்களில் இன்னும் தேடல் இருந்து கொண்டே உள்ளது.

வேளையாட்களோ குறைவு என்று இயேசு சொன்னது மக்கள் குறைவை அல்ல சாட்சிகள் குறைவை குறிப்பிடுகிறார்

“வேலையாட்களோ குறைவு” என்பது

எண்ணிக்கை பற்றியது அல்ல.இது நம்பிக்கை பற்றியது.

நாம் பெற்றதை பகிர வேண்டும் என்ற நம்பிக்கை குறைவு.

ஆகவே இயேசு சொல்கிறார்

அனைத்திற்காகவும் “ஆண்டவரிடம் வேண்டுங்கள்”

இயேசுவால் தேர்ந்தெடுக்கப் பட்ட சீடர்கள் கூட தங்கள் விசுவாசத்தில் உறுதியாக இல்லை

12 சீடர்கள் இயேசுவால் தேர்ந்தெடுக்கப் பட்டனர். ஆனால் சீடர்களில் ஒருவரான யூதாஸ் இஸ்காரியோத் இயேசுவைக்கு துரோகம் செய்தார்.

பேதுரு இயேசுவை தெரியாது என்று மறுதலித்தார்

இதர சீடர்கள் அனைவரும் இயேசுவை தனியாக விட்டு விட்டு ஓடிப்போனார்கள் . சீடர்களுக்கு இறை அழைப்பு கிடைத்தும் அவர்களால் விசுவாசத்தில் நிலைத்து நிற்க முடியவில்லை

தோல்வி என்பது முடிவு அல்ல அது வெற்றியின் அடையாளம் மற்றும் தொடக்கம் என்பதை சீடர்கள் அறியவல்லை.

இயேசு சீடர்கள் தனக்கு துரோகம் செய்தார்கள் என்றோ மறுதலித்தார்கள் என்றோ அவர்களை விட்டு விடவில்லை.அவர்களை மீண்டும் திரும்ப அழைத்து விசுவாசத்தின் மூலம் தட்டி எழுப்பினார்.

இயேசு ஊட்டிய விசுவாசத்தின் மூலம் பேதுரு இறை செய்தியை உலகெங்கும் அறிவிக்கும் அறிவிப்பவரானார்

பவுல் திருச்சபையை உலகெங்கும் விரிவாக்கினார்

இறைவன் பரிபூரணத்தின்காக காத்திருக்கவில்லை.அவர் தனது இறை கிருபையால் அஅனைத்தையும் தொடங்குகிறார்.

இலவசமாக பெற்றுக்கொண்டீர்கள் இலவசமாகவே கொடுங்கள் ” என்பது விவிலிய இறை வார்த்தை.

இறை கிருபையை விலை கொடுத்து வாங்க முடியாது.அது இறைவனால் வழங்கப்படும் பரிசு. அதை மற்றவர்களுடன் பகிர வேண்டும்.

நாம் இறைவனின் அழைத்தல் என்ற பயணத்தால் தூக்கி நிறுத்த படுகிறோம்

இறைவனால் அன்பு செய்யப் படுகிறோம் .

அவரால் மட்டுமே அழைக்கப்படுகிறோம்.

இறை பணியாற்ற அனுப்பப்படுகிறோம்.

கோழிகளுடன் வளர்ந்த கழுகு தன்னைபற்றி அறியாமல் கோழியாகவே வாழ்ந்தது. ஆனால் ஒருநாள் அது கழுகாக மாறி பறந்தது.

அது புதியதாக மாறவில்லை. அது தன்னுடைய உண்மை நிலையை கண்டுபிடித்தது.

இறுதி சிந்தனையாக

நாம் அனைவரும் செய்ய வேண்டியது

வலிமையானவர்களாக இருப்பது அல்ல மாறாக இறைவனை நம்புவது

தகுதியானவர்களாக இருப்பது மட்டுமே அல்லஅவரது அன்பை முழுமையாக ஏற்றுக்கொள்வது

முழுமையான நிறைவோடு இருப்பது அல்லஅவரது அழைப்புக்கு நிறைவான நம்பிக்கையோடு பதிலளிப்பது

நம்மை தூக்கி அரவனைத்து நேசிப்பதோடு இறை அனுபவத்தை பெற்று பிறரை முழுமையாக புரிந்து அன்பு செலுத்த அனுப்பிவைக்கும் இறைவனை நாம் நாம் நம்புவோமாக.

ஆமென்.

Prepared by: **Fr. Paul Julian,** Perth ,Australia

and Translated by: **Leonard Arulandhu,** Holy Family Church, Chennai